# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 119/2018**

பெயர்: **சங்கீதா** நாள்: 18.04.2026

வா.சா.2 – 6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.2 – சங்கீதா - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம்12.35

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதும் வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் யார் அழைத்தன் பேரில் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால் வாதி அழைத்தன் பேரில் வந்தேன். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகளை எனக்கு நன்கு தெரியுமா என்றால் ஆமாம். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்னுடைய மாமியார் அவருடைய மகனை தான் திருமணம் செய்துள்ளேன். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2018 ம் ஆண்டு திருமணம் ஆனது. திருமண தேதி நியாபம் உள்ளதா என்றால் உள்ளது 04.03.2018 ஆகும். என் தகப்பனாருக்கு என்ன ஊர் என்றால் ஜலகண்டாபுரம் ஆகும். ஜலகண்டாபுரத்திற்கும் இந்த தாவா சொத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கி.மீ. ஆகும். நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கை 4 வது பத்தியில் "3 மற்றும் 4 ம் பிரதிவாதிகளிடமிருந்து கடந்த 14.12.1992 தேதியன்று மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.300/1992 ன் படி வாதி கிரையம் பெற்றார்" என்று குறிப்படப்பட்டுள்ளது என்றும் அந்த தேதியில் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து காலி நிலம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் அந்த நிலத்திற்கும் நான் குடியிருக்கும் நிலத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் ½ கி.மீ. இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 5 ம் பத்தியில் வாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. அந்த தாவா சொத்திற்கு தெற்கு புறத்தில் 3, 4 பிரதிவாதிகள் எவ்வளவு நீளம் மற்றும் அகலத்திற்கு கிரையம் பெற்றார்கள்

என்றால் எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆன போதிலிருந்து இந்த வழக்கின் பிரதிவாதிகளுக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 6 ம் பத்தியில் கடந்த 16.06.2018 ம் தேதியன்று காலை சுமார் 6 ½ மணி அளவில் பூமி பூஜை செய்த போது பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 28.07.2018 ம் தேதியன்று பிரதிவாதிகள் மீண்டும் இடையூறு செய்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதியானவர் என்னுடைய மாமியார் என்பதனால் அவர் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை 3, 4, 7, 8 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.50

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.04.18 17:00:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.